**செய்தி வெளியீடு எண் : 1279** **நாள் : 23.08.2024**

**மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தொல்குடியினர் வேளாண்மை, மேலாண்மை திட்டத்தின் கீழ் 290 பயனாளிகளுக்கு ரூ.1.76 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்**

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சதுரங்க பேட்டை பகுதியில் இன்று (23.08.2024) மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் தொல்குடியினர் வேளாண்மை, மேலாண்மை திட்டத்தின் கீழ் 290 பயனாளிகளுக்கு ரூ.1.76 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி ஜி.லட்சுமி பிரியா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.ஜி.ராஜேந்திரன் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.உமா மகேஸ்வரி அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஆ.இராஜ்குமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள்.

**பின்னர் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில்,**

தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியின மக்களின் பொருளாதார உயர்வுக்கும், சமுக தலைமைப்பண்பு, பெண்களுக்கான அதிகாரமளிப்பதற்கான முக்கியமான நடவடிக்கையாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப் பெயரில் தமிழக அரசு, பழங்குடியினர் நலத்துறை மூலமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பழங்குடியின பயனாளிகளுக்கு வாழ்வாதார திட்டத்திற்கான உபகரணங்கள் வழங்கி, இன்று ஒரு முக்கியமான தருணத்தை பதிவு செய்துள்ளது. பூண்டி ஏரி, சதுரங்கப்பேட்டை பகுதியில் நடைபெற்ற இந்த நிகழ்வு, 2024 மார்ச் மாதம் தொடங்கப்பட்ட திட்டமான ஐந்திணை திட்டத்தின் முக்கிய கட்டமாகும். மொத்தம் ரூ.**1565.36** லட்சம் செலவில் செயல்படுத்தப்படும் ஐந்திணை திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் சுமார் **7000** பழங்குடியின பயனாளிகள் பயனடைவார்கள். பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மாற்றியமைக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான முயற்சியாக தொல்குடி வாழ்வாதார திட்டம் உள்ளது. குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள பழங்குடியின மக்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களை சமாளிக்க, மாவட்ட அளவிலான வளர்ச்சியில் இந்த திட்டம் கவனம் செலுத்தி வருகிறது.

இன்றைய நிகழ்ச்சியில், மீன்பிடி படகு, மீன்பிடி வலை, மீன் விற்பனைக்கான உபகரணங்கள் மற்றும் ஆடு, கோழி வளர்ப்பதற்காக கால்நடைகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருப்பேர், பட்டறைபெரும்புத்தூர், பூண்டி மற்றும் எல்லப்ப நாயுடுபேட்டை, பழவேற்காடு, கோட்டைக்குப்பம் ஆகிய ஆறு ஊராட்சிகளைச் சேர்ந்த 290 பழங்குடியின பயனாளிகளுக்கு இந்த அத்தியாவசிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் அவர்கள் சுயசார்பு பெற்று, தங்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் கனவு திட்டமான தொல்குடி வாழ்வாதார ஐந்திணை திட்டத்தின் முக்கிய அங்கமாக கால்நடை சார்ந்த வாழ்வாதார வளர்ச்சி உள்ளது. பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பட்டியலிடப்பட்ட IRCDS தொண்டு நிறுவனம் மூலம் பழங்குடியின மீனவர்களின் வளர்ச்சிக்காக ரூபாய் 37.19 லட்சம் மதிப்பிலான திட்டத்தின் மூலம் 90 பயனாளிகள் பயன்பெறுகின்றனர். மேலும், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS) திருவள்ளூர், காஞ்சீபுரம், செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஒரு மாதிரி திட்டம் தொடங்கியுள்ளது. ரூ.202 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் இந்த திட்டம், விவசாயிகளுக்கு தேவையான திறன்பயிற்சி மற்றும் உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் பழங்குடியின விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியை அதிகரித்து நிலையான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் தேசிய மீன்வள மரபணு பேனகம், கொச்சி (NBFGR) நிறுவனம் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கோட்டைக்குப்பம் ஊராட்சியில் செஞ்சியம்மன் நகரில் 100 பழங்குடியின குடும்பங்களுக்கு வண்ண மீன் வளர்ப்பு, தொழில்நுட்பத்துடன் கூடிய நண்டு வளர்ப்பு மற்றும் நவீன தொழில்நுட்பத்தில் மீன் வளர்ப்பு பண்ணைகள் ஏற்படுத்தி பயிற்சிகள் வழங்குவதற்காக ரூ.87.61 லட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். மேலும், பல ஆராய்ச்சி நிறுவனங்கள், அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூகத்திற்கு இடையிலான வலுவான கூட்டாண்மையின் அடிப்படையில் ஐந்திணை திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் நலத்துறை இந்நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், பழங்குடியின மக்களின் வாழ்க்கையில் நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சியின் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு வளர்ச்சியின் பயன்கள் கிடைப்பதில் அரசு உறுதியாக உள்ளது. ஐந்திணை திட்டமானது இந்த உறுதிப்பாட்டிற்கு சான்றாகும். இந்த திட்டம் பழங்குடியின மக்களின் வாழ்க்கையில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தி, தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பங்களிக்கும் என்று நம்புகிறோம் மேலும் இந்த திட்டத்தின் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 290 பயனாளிகள் ரூ.176.88 லட்சம் மதிப்பீட்டில் பயனடைகிறார்கள் என மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழிசெல்வராஜ் அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக பயனாளிகளுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்களை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். தொடர்ந்து பூண்டி ஏரியில் பயனாளிகளுக்கு படகு வழங்கி சேவையினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்,

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு.எஸ்.அண்ணாதுரை, ம.தொ.ப., திட்ட மேலாளர் திரு.பொன்வைத்தியநாதன், திருள்ளூர் மாவட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின அலுவலர், திருமதி செல்வராணி, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக திட்ட முதன்மை ஆய்வாளர், டாக்டர் ரூபாநந்தினி, அரசு சார்பற்ற தொண்டு நிறுவன (IRCDS) பிரதிநிதி ஸ்டீபன், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் (NBFGR, கொச்சி), முனைவர் டி.டி.அஜித்குமார் ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் பிற முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu